முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS 29/ 2022

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் வா.த.சா.2–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரசாந்த் | வயது | : | 31 |
| தந்தை/கணவர் பெயர் | : | ரணதேவ் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் அம்மா கலாவும் நானும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம். 1993 மற்றும் 2016 ல் நடந்த பாகப்பிரிவினை பத்திரத்தினை ரத்து செய்ய வேண்டும என்று பரிகாரம் கேட்டுள்ளேன். வழக்கு சொத்துக்கள் என் குடும்பத்திற்கு பாத்தியம் என்று நேரடியாக எனக்குத் தெரியும். நான் தற்போது காட்டுமன்னார்கோவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இன்று சாட்சியமளிக்க விடுப்பில் வந்தேன். இந்த சொத்து சம்பந்தமாக என் அம்மா குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்தில் OS 44/2019 வழக்கு கொடுத்தது பற்றி எனக்குத் தெரியும். OS 44/2019 வழக்கானது ஏற்கனவே கடலூர் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் OS 322/2018 என தாக்கல் செய்யப்பட்டு அதன் பிறகு தான் டிரான்பர் ஆகி குறிஞ்சிப்பாடி நீதிமன்றத்திற்கு சென்றது என்றால் சரிதான். அந்த வழக்கினை என் அம்மா அவர்களுடைய இடத்தில் நடராஜன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்ததாக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார். நடராஜன் ஆக்கிரிமிப்பு செய்த சொத்து என் அம்மாவின் சொத்து.

அது என் தாயாரின் தகப்பனார் கொடுத்த சொத்து, 52/8 அதன் சர்வே எண். அந்த சொத்து என் அம்மாவிற்கு பாகத்தில் வந்ததாக சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகத்தில் வந்ததாக சொல்லவில்லை, ஆனால் பாகம் பிரித்தது தவறு நாங்கள் அந்த பாகத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தோம். என் அம்மா, என் பாட்டி, என் அம்மாவின் சித்தப்பா சடைய படையாட்சி ஆகியோர்களுக்கு 22.03.1993 ல் ஒரு தலைபட்சமாக பாக பிரிவினை ஏற்பட்டது. அந்த பாக பிரிவினை பத்திரம் ஏற்பட்ட போது நான் பிறக்கவில்லை. அதில் சாட்சி கையொப்பம் என் தாத்தா சடயபடையாட்சி, அவரின் உறவினர் கிருஷ்ணசாமி, எங்கள் தரப்பில் மனோகர் ஆகியோர்கள் போட்டார்கள். மனோகர் என்பவர் என் அம்மாவின் மாமா. என் தாய் வழி பாட்டனார் பெயர் ராமகிருஷ்ணன். என் அம்மாவும், என் தாய் வழி பாட்டியும் சேர்ந்து தயாளன் என்பவருக்கு சொத்தினை கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் சர்வே எண் 24/12. தற்போது என்னிடம் காட்டப்படும தயாளன் வாங்கிய கிரையப்பத்திரத்திரம் **பி.சா.ஆ. 8** ஆகும். அதிலும் மனோகர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். என் தாய் வழி பாட்டனார் இறப்பிற்கு பிறகு என் குடும்பத்தில் ஏற்படும் நல்லது கெட்டது போன்ற விஷயங்களை மனோகர் தான் உடனிருந்து கவனித்துக்கொள்வார் என்றால் சரியல்ல. 1993ல் என் அம்மா என் பாட்டிக்கு பாகபிரிவினை ஏற்பட்டது, அதில் ஷெடியூல் A தையல்நாயகி மற்றும் கலாவிற்கும் ஷெடியூல் B சடைய படையாட்சிக்கும் பிரிக்கப்பட்டது. அந்த பாகபிரிவினை ஏற்பட்ட போது என் அம்மாவின் வயது தோராயமாக 22 இருக்கும். என் அம்மா அப்போது 12 ஆம் வகுப்பு முடித்திருந்தார். என் அம்மா தற்போது M.A., B.Ed., படித்துள்ளார். என் அம்மா B.Ed மட்டும் Regular ல் படித்தார்.

என் அம்மாவிற்கு விவரம் தெரியாத காலத்தில் பாகபிரிவினை ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, பாகப்பத்திரமே ஏற்படவில்லை. என் தரப்பில் மனோகரன் என்பவர் உடனிருந்து எல்லா வேலைகளையும் பார்த்துள்ளதால் யாரும் யாரையும் மிரட்டி ஏற்படுத்திய பத்திரம் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவையும் பாட்டியையும் மிரட்டி கையெழுத்து வாங்கியதாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் என் அம்மாவின் திருமணம் என்ற காரணத்தினால் புகார் கொடுக்க தடுக்கப்பட்டது. அது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதும் யாரும் யாரையும் தடுக்கவில்லை என்பதும் சரியல்ல. என் வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்களை என் தாத்தா கிரையம் வாங்கியதாக சொல்வதற்கு என் தாத்தா பெயரில் எந்த கிரையப்பத்திரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பினரிடம் உள்ளது. என் தாத்தா யாரிடமிருந்து வாங்கினார் என்பதை காண்பிக்க சான்றிட்ட நகல் எடுத்து தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் பிரதிவாதிகள் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் சான்றிட்ட நகல் வாங்கி தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என் தாத்தா எந்த சொத்தினையும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல, கிரையம் வாங்கி தனது சொந்த அனுபவத்தில் அனுபவம் செய்து வந்தார். உண்மையில் என் தாத்தா கிரையம் வாங்கியிருந்தால் கிரையப்பத்திரம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக வில்லங்கம் பார்த்தால் அனைத்து ஆவணங்களின் விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

எனது தாத்தா பெயரில் உளள் சொத்துக்களின் ஆவணங்கள் பற்றியும் தெரிய வரும் என்றால் அனுபவ சொத்துக்கள் வில்லங்கத்தில் வர வாய்ப்பு இல்லை, கிரையம் வாங்கியிருந்தால் வரும். என் பாட்டி உயிருடன் இருக்கும் வரை 1993 ல் ஏற்படுத்திக்கொண்ட பாக பிரிவினை பத்திரத்தினை ரத்து செய்ய எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்த வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டது என்றால் பிரிவு 17 limitation Act ன் கீழ் தாக்கல் செய்தேன். எனக்கும், என் அம்மாவிற்கும் விவரம் தெரியவந்தது 2020, தெரியவந்து 12 வருடங்களில் தாக்கல் செய்யலாம். 1993 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் என் அம்மாவும் தரப்பினர் தான். மேலும் பாகப்பத்திரத்தில் என் பாட்டி கனகாயாள் சேர்க்கப்படவில்லை, இதுவே இது ஒரு un due influence மூலம் ஏற்பட்டது. இது போல் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் கனகாயாள் தான் தாக்கல் செய்ய வேண்டும் என்பதும் தரப்பினரான என் அம்மா தாக்கல்செய்ய இயலாது என்பதும் சரியல்ல, எனது தாயார் அவருடைய தந்தை சொத்திற்கு தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் அது நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.